| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | | |
|---|---|---|
| முதலாம் தவணைப்பரீட்சை - 2019 | | |
| தரம் - 07 | வரலாறு | நேரம் : 2 மணித்தியாலம் |

## பகுதி I

❖ **மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) புராதன காலத்தில் இடம்பெற்ற சேனைப்பயிர்ச்செய்கைக்கு உம்மக்க ஜாதக நூலில் குறிப்பிடப்படும் பெயர்.
1. செஹென் 2. சேன் 3. பிட்டபிம் 4. கெதிஅட

2) உறுகுணைப் பிரதேசத்தில் சேனைப் பயிர்ச்செய்கை இடம் பெற்றிருந்தது என ஆதாரப்படுத்தும் போது அக்காலத்தில் ஆட்சி செய்த மன்னன்.
1. மஹாநாகன் 2. தேவநம்பியதீசன் 3. காவந்தீசன் 4. மகாசேனன்

3) சேனைப் பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்காக மரத்தின் மேல் அமைக்கப்படும் குடிசையை எவ்வாறு அழைப்பர்.
1. தண்டுவெட்ட 2. நவதெளிசேனை 3. ஹெலிகடா 4. பெல

4) துட்டகைமுனுவின் மகனான சாலிய குமாரன் பிறந்த காலத்தில் கரைநெல் விளைந்திருந்ததாக எடுத்துக்காட்டும் இலக்கிய மூலாதாரம்.
1. மகாவம்சம் 2. சீஹலவத்து 3. தீபவம்சம் 4. சூளவம்சம்

5) புராதன காலத்தில் கோபாலர்கள் வாழ்ந்த தொரமடலாவ பிரதேசம் எந்த மன்னனுடன் தொடர்புபட்டதாக கருதப்படுகின்றது.
1. தேவநம்பியதீசன் 2. துட்டகைமுனு 3. சாலியகுமாரன் 4. பண்டுகாபயன்

6) நிரல் I ல் கைவினைஞர்களையும், நிரல் II ல் கைத்தொழிலையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை இணைக்கும் பொழுது பெறப்படும் விடை

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. கம்மாளர் | A பஞ்சு |
| 2. பெஹகார | B இரத்தினக்கல் |
| 3. கும்பல்லு | C இரும்பு |
| 4. மணிகர | D களிமண் |

1. CDAB 2. CBAD 3. CABD 4. CADB

7) தொல்பொருள் அகழ்வின் போது ஹஸ்எபு கஹபன நாணயம் கண்டுபிடிக்கப்பட்ட மாவட்டம்.
1. அம்பாந்தோட்டை 2. மட்டக்களப்பு 3. அநுராதபுரம் 4. அம்பாறை

8) சந்தை நிர்வாகம் தொடர்பாக 4ம் உதய மன்னன் எழுதியதாக ஆதாரப்படுத்தும் கல்வெட்டு யாது?
1. பதுளைத்தூண் கல்வெட்டு 2. மிகுந்தலை சுவர் கல்வெட்டு
3. அபயகிரி கல்வெட்டு 4. திஸ்ஸமகாராம கல்வெட்டு

9) புராதன சமூகத்தில் பெரும் மாற்றத்துக்கு காரணமான மன்னனாக பின்வருவோரில் கருதப்படக்கூடியவர்.
1. 8ம் அக்கபோதி 2. தேவநம்பியதீசன் 3. காவந்தீசன் 4. துட்டகைமுனு



kalvi.lk

10) சுவையான உணவு சமைத்ததாக சத்தர்மலங்காரவில் குறிப்பிடப்படும் பெண்.
1. அசோகமாலா 2. விகாரமகாதேவி 3. சங்கமித்தை 4. இரத்னாவல்லி

11) பிணங்களை எடுத்துச் செல்வதற்காக புலையர்களை நியமித்ததாக கூறப்படும் அரசன்.
1. தேவநம்பியதீசன் 2. துட்டகைமுனு 3. பண்டுகாபயன் 4. மூடசிவன்

12) அநுராதபுரத்தில் 3 நூற்றாண்டுகள் ஆட்சிசெய்த அரசவம்சமாக கருதக்கூடியது,
1. மாணவர்மன் 2. கலிங்கம் 3. பாண்டியர் 4. இலம்பகர்ணம்

13) மாணவர்மன் தனது ஆட்சியுரிமைக்காக போராடிய ஆரம்பகாலத்தில் இந்தியாவில் எழுச்சி பெற்றிருந்த அரசு.
1. பாண்டியர் 2. பல்லவர் 3. சேரர் 4. சோழர்

14) மாணவர்மத்தின் அரச பரம்பரையில் அரசனான 9ம் அக்கபோதி ஆட்சி செய்யும் முன் ஆண்ட அரசன்?
1. 2ம் தப்புலன் 2. 1ம் சேனன் 3. 2ம் சேனன் 4. 4ம்காசியப்பன்

15) 1ம் சேனன் காலத்தில் இடம் பெற்ற பாண்டியரின் ஆக்கிரமிப்பின் பிரதான நோக்கமாக இருந்தது.
1. பாண்டியர் இலங்கையை கைப்பற்ற வேண்டும்.
2. பாண்டியருக்கும் - மாணவர்ம அரசனுக்கும் இடையிலான அரச ஆதிக்கப் போட்டி.
3. இலங்கையிலிருந்த செல்வங்களை கொள்ளையடித்தல்.
4. இந்தியாவிலுள்ள செல்வங்களை கொண்டு செல்லல்.

16) இந்தியாவில் ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் தனது ஆட்சியுரிமையை நிலை நிறுத்திக்கொள்ள போரிட்ட மன்னன்.
1. 1ம் நரசிங்கவர்மன் 2. வரகுண வர்மன்
3. 2ம் நரசிங்கவர்மன் 4. 3ம் வரகுண வர்மன்

17) இலங்கையின் வரலாற்றில் பட்டாபிசேகத்தினை சத்திரிய குலமுறைப்படி பெற்றுக் கொண்ட முதல் மன்னன்.
1. விஜயன் 2. பண்டுகாபயன் 3. மூடசிவன் 4. தேவநம்பியதீசன்

18) மன்னன் தனது குழுவினருடன் நாடுமுழுவதும் தமது அதிகாரத்திற்கு கட்டுப்படுத்தும் ஆட்சிமுறை அழைக்கப்படும் விதம்.
1. பிரதேச ஆட்சி 2. மத்திய ஆட்சி 3. கிராமசபை ஆட்சி 4. ரட்ட ஆட்சி

19) அநுராதபுரத்தின் இறுதிக் காலப்பகுதியில் கிராமத்தை நிர்வகித்தோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்.
1. கமிக 2. வெவ்கமிக 3. கம்லத்தன் 4. ரட்டலத்தன்

20) அநுராதபுரத்தை ஆட்சிசெய்த முதல், இறுதி மன்னர்களை முறையே குறிப்பிடுக.
1. பண்டுகாபயன், 4ம் மகிந்தன் 2. 5ம் மகிந்தன், பண்டுகாபயன்
3. பண்டுகாபயன், 5ம் மகிந்தன் 4. 4ம் மகிந்தன், பண்டுகாபயன்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

❖ **கவனிக்குக**

***1ம் வினாவிற்கும், நீர் விரும்பிய ஏனைய நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.***

*1)* அ. *1.* முதலாம் தவணைக்காக வரலாறு பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீட்டு வகைகள் இரண்டு தருக.


*2.* கணிப்பீட்டை மேற்கொள்வதற்காக நீர் பயன்படுத்திய தரஉள்ளீடுகள் நான்கு தருக.

*3.* நீர் கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது எதிர்கொண்ட சவால் ஒன்றினையும், நன்மை ஒன்றினையும் முறையே தருக.

(3 x 2 = 6 புள்ளிகள்)

ஆ. *1.* எதிரே தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் காட்டப்பட்டுள்ள எழுத்துக்களை, கீழ்வரும் இடங்களிற்கு பொருத்தமானவற்றை தெரிவு செய்து எழுத்துக்களை எழுதுக.

*1.* கோகர்ணம் ( )
*2.* மாகம ( )
*3.* கொடவாய ( )
*4.* மாந்தை ( )
*5.* ஜம்புகோளப்பட்டினம் ( )
*6.* மகாவலி கங்கை ( )




(6 x 1 = 6 புள்ளிகள்)

*2) 1.* பண்டைய காலத்தில் மக்களின் வாழ்க்கை முறையானது இடம் பெற்ற பிரதான துறைகளை குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

*2.* கீழ்வரும் விடயங்களுக்கு பொருத்தமான விடையினை முறையே தருக.

A. கரைநெல்லைக் குறிப்பிடும் மற்றுமொரு சொல்.

B. சேனைகளைப் பாதுகாப்பதற்காக அதனை சூழக் கட்டப்படும் கம்புகளால் ஆனவேலி அழைக்கப்படும் விதம்.

C. நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை மூன்று போகத்தில் இடம்பெற்றது என ஆதாரப்படுத்தும் கல்வெட்டு.

D. கிராமக் குளங்களை அமைத்தவர்கள் அழைக்கப்பட்ட விதம்.

*(04 புள்ளிகள்)*

*3.* புராதன காலத்தில் இடம்பெற்ற பயிர்ச்செய்கைகளுள்,

A. சேனைப் பயிர்செய்கையை பாதுகாப்பதற்காக மேற்கொண்ட வழிமுறைகள் மூன்றினைத் தருக.

B. சேற்றுநிலம் பயிர்ச்செய்கையை பாதுகாப்பதற்காக மேற்கொண்ட வழிமுறைகள் இரண்டினையும் தருக. *(05 புள்ளிகள்)*

*3) 1.* கீழ்வரும் விடயங்களுக்குப் பொருத்தமான விடையினை முறையே எழுதுக.

A. பாலைப் பெற்றுக் கொள்வதற்காக வளர்க்கப்பட்ட பசுக்கள் அழைக்கப்பட்ட விதம்.



kalvi.lk

B. நகரங்களுக்கு மேலதிகமாக வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட வணிகக் கிராமங்கள் அழைக்கப்பட்ட பெயர்.

C. ருவன்வெலிசாவை அலங்கரிப்பதற்காக உரோம் நாட்டுடன் தொடர்பு கொண்ட மன்னன். *(03 புள்ளிகள்)*

*2.* A. இலங்கை வெளிநாட்டு வர்த்தகத்தில் தொடர்பு கொண்டிருந்த நாடுகள் இரண்டினை தருக.

B. வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யும் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

*3.* A. உள்நாட்டு வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த இரண்டு நகரங்களைக் குறிப்பிடுக.

B. சந்தை தொடர்பாக 4ம் உதய மன்னனால் எழுதப்பட்ட கல்வெட்டில் காணப்படும் சட்டதிட்டங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

4) *1.* பண்டைக் காலத்தில் வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த துறைமுகங்கள் மூன்றினை தருக. *(03 புள்ளிகள்)*

*2.* கீழ்வரும் விடயங்களுக்குப் பொருத்தமான விடையினை முறையே தருக.

A. உழைப்புக்கு உழைப்பை பரிமாறிக் கொள்ளும் முறை அழைக்கப்படும் விதம்.

B. சமையல் கலையில் பிரசித்தி பெற்ற பெண்கள் ''மதுபாச்சிகா'' என்று அழைக்கப்பட்டதாக ஆதாரப்படுத்தும் இலக்கிய மூலாதாரம்.

C. அநுராதபுரத்தில் இலம்பகர்ண அரசவம்சத்தை ஆரம்பித்த மன்னன்.

D. அநுராதபுரத்தில் இறுதிக் காலப்பகுதியில் ஆட்சி செய்த அரசவம்சம். *(04 புள்ளிகள்)*

*3.* A. அநுராதபுரத்தை ஆட்சி செய்வதற்காக போரிட்ட பிரதான அரசவம்சங்கள் இரண்டினை தருக.

B. மாணவர்மன் அரசனாகுவதற்கு முன் காணப்பட்ட அரசியல் இயல்புகள் மூன்றினைத் தருக. *(05 புள்ளிகள்)*

5) *1.* அநுராதபுரத்தை ஆட்சிசெய்த மானவர்ம வம்சத்தின் சிறப்பு ஆட்சியாளர் மூவரை தருக. *(03 புள்ளிகள்)*

*2.* கீழ்வரும் விடயங்களுக்குப் பொருத்தமான அரசர்களைத் தருக.

A. மானவர்மன் தனது ஆட்சியுரிமையை பெற்றுக் கொள்வதற்காக தப்பியோடி சரணடைந்த பல்லவ அரசன்.

B. 2ம் தப்புலனின் பின் 3 வருடங்கள் அனுராதபுரத்தை ஆட்சி செய்தவன்.

C. 2ம் சேனனிடம் உதவிகோரிய பாண்டிய அரசன்.

D. மானவர்மன் சிறுவனாக இருந்தபோது, அவனிடமிருந்து ஆட்சியுரிமையை பெற்றுக் கொண்ட அரசன். *(04 புள்ளிகள்)*

*3.* A. அநுராதபுரத்தில் காணப்பட்ட பிரதான ஆட்சிமுறைகள் இரண்டினை குறிப்பிடுக.

B. 2ம் சேன மன்னினால் மக்களுக்கு ஆற்றியப் பணிகள் மூன்றினைத் தருக. *(05 புள்ளிகள்)*

6) *1.* அநுராதபுரக் காலத்தில் பெரும்பாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த ஆட்சியுரிமைகளை குறிப்பிட்டு அவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக. *(03 புள்ளிகள்)*

*2.* அரசாட்சி நடவடிக்கைகளின் போது கீழ்வருவோரிற்கு வழங்கப்பட்ட பெயர்களைத் தருக.

A. ஆவண நடவடிக்கைக்கு பொறுப்பானவர்.

B. எதிர்கால அரசுரிமை பெற்றவன்.

C. படைகளுக்குப் பொறுப்பானவர்.

D. திறைசேரிக்குப் பொறுப்பானவர். *(04 புள்ளிகள்)*

*3.* மத்திய ஆட்சியின் உயர்நிர்வாகியான மன்னனுக்கே உரித்தான கடமைகள் ஐந்திணைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*



kalvi.lk

# GRADE 6,7,8

## STUDY WITH US..!

# MATHS

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் கணித பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

| TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|
| 850/= Monthly | 1000/= Monthly |

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page